ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கூத்தும் அரங்கும் நாடகமும்

முனைவர்.பெ. பகவத்கீதா
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
அரசு கலைக்கல்லூரி, திருச்சி -22
maythiniravi@gmail.com

53

**ஆய்வுச் சுருக்கம் :**

தமிழ் நாடக உலகில் கூத்து , அரங்கு , நாடகம் ஆகிய சொற்கள் பயன்பாட்டில் இருப்பவை . ஆனால் அவற்றிற்கு இடையே நுட்ப வேறுபாடுகள் உள்ளன . ஆனால் பொது நிலையில் இம்மூன்று சொற்களையும் ஒரே பொருளில் வழங்கி வருவது நடைமுறையாக உள்ளது. ஆங்கிலத்திலும் இதற்கான விளக்கத்தை அறியும் பொழுது மேலும் அதன் நுட்பத்தைத் தெளிவாக அறியமுடியும். கூத்து , அரங்கு , நாடகம் ஆகிய சொற்கள் சங்க இலக்கியம் , சிலப்பதிகாரம் , மணிமேகலை , பதினெண் கீழ்க்கணக்கு போன்ற நூல்களில் இடம்பெற்றுள்ள இச்சொற்களின் எண்ணிக்கை , பொருள் போன்றவற்றை ஆய்வது, அச்சொற்களின் மூலத்தை அறிவதோடு நுட்ப வேறுபாடுகளையும் அறிந்தால் கால அடிப்படையில் அச்சொற்களின் பொருள் மாறுபட்டு உள்ளது என்பதையும் அறிய முடிவதே இந்த ஆய்வின் நோக்கமாகின்றது.

Drama , Theatre,Play ஆகிய மூன்று சொற்கள் வெவ்வேறானவை . Drama என்ற சொல் Dramenon என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது. அதற்குப் பொருள் நிகழ்த்தப்பட்டது அல்லது செய்யப்பட்டது என்பது பொருள். தமிழில் இச்சொல் நாடகம் என்று வழங்கப்படுகிறது .
கூத்து என்பது நாடகத்திற்கான பிரதியீட்டுச் சொல் என்று சி.மௌனகுரு குறிப்பிட்டு இருப்பதிலிருந்து கூத்து நாடகத்தையே குறித்ததா என்னும் கேள்விக்கு , கூத்து என்பது ஆட்டம் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

Theatre என்னும் சொல் Theatron என்னும் கிரேக்கச் சொல்லிருந்து தோன்றியது. இதற்கு பார்க்குமிடம் என்று பொருள் . இதில் மூன்று முக்கியமானதாக விளங்குகின்றன.அவை மனிதர்கள் , தளம் , உணர்ச்சிகளின் கொந்தளிப்பு மோதுகை ஆகிய மூன்றுமாகும்.

Play என்னும் சொல் நாடகத்தினை இலக்கிய வடிவமாக மாற்றுவதாகும்.
ஆனால் இச்சொற்கள் யாவும் தனித்தனியானவை என்பதே அச்சொற்களுக்கான தனித்துவமும் சிறப்புமாகும்.

**திறவுச் சொற்கள் :** கூத்து - அரங்கு -நாடகம் - அரிஸ்டாட்டில் - சங்க இலக்கியங்கள் -சிலப்பதிகாரம் - மணிமேகலை - பதினெண் கீழ்க்கணக்கு - drama - Theatre - play - தெருக்கூத்து - வடிவங்கள் - விளக்கங்கள் - போன்றன

**முன்னுரை :**

தமிழ் நாடக வரலாற்றில் ஒன்றோடு ஒன்று இணைந்து பயணிக்கும் சொற்கள் கூத்து , அரங்கு , நாடகம் .
இச்சொற்களின் இடையேயான தொடர்புகளையும் நுட்ப வேறுபாடுகளையும் ஆய்ந்து அறிவதன்

மூலம் அம்மூன்று சொற்களின் பொருத்தப்பாடுகளைத் தெளிவுப்படுத்த இயலும்.

**கூத்து :**

கூத்து என்னும் சொல் சங்க இலக்கியத்தில் கலித்தொகையில் மட்டுமே குறிப்பிடப் பெற்றுள்ளது.

" வீழ்க்கை பெரும் கரும்_கூத்து -" 1 (கலி 65/29 http://tamilconcordance.in/ )

இதில் கூத்து என்னும் சொல் ஆடல் , ஆட்டம் , கதை தழுவிய ஆட்டம் என்னும் பொருளில் அமையாது நகையோடு அமைந்த கேலி நிகழ்வாக பொருள் கொள்ளப் படுகின்றது.

கூத்து என்னும் சொல் தொல்காப்பியம் , சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை. சிலப்பதிகாரத்தில் ஆறு இடங்களில் கூத்து என்னும் சொல் இடம் பெற்றுள்ளது .

" இரு வகை கூத்தின் இலக்கணம் அறிந்து " 2 ( சிலப்பதிகாரம் :புகார் :3/12)

" பல வகை கூத்தும் விலக்கினில் புணர்த்து " 3( சிலப்பதிகாரம் : புகார்:3/13 )

"கொண்ட வகை அறிந்து கூத்து வரு காலை "4( சிலப்பதிகாரம் :புகார்:3/19 )

"பண் நின்ற கூத்து பதினொன்றும் மண்ணின் மேல் " 5( சிலப்பதிகாரம் :புகார்:3/177 )

"குமரி கோலத்து கூத்து உள்படுமே " 6( சிலப்பதிகாரம் : மது:12/115 )

"கூத்து உட்படுவோன் காட்டிய முறைமையின் "7 (சிலப்பதிகாரம்:வஞ்சி:26/125)

போன்ற வரிகள் கூத்தின் இலக்கணம் , கூத்தின் வகைகள் அகக்கூத்து , புறக்கூத்து , மற்றும் ஆடல் வகையாக அமையும் குரவைக் கூத்து வரிக் கூத்து போன்ற கூத்துகளையும் கூத்தாடுவோன் பற்றியும்விவரித்து உள்ளன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நான்மணிக்கடிகை, திணைமாலை நூற்றைம்பது ,பழமொழி ஆகியவற்றில் கூத்து என்னும் சொல் இடம் பெற்று உள்ளது.

" நாட்டான் வீறு எய்துவர் மன்னவர் கூத்து ஒருவன் " 8 ( நான்மணிக் கடிகை:83/3 )

"குலம் காரம் என்று அணுகான் கூடும் கூத்து என்றே "9 (திணைமாலை நூற்றைம்பது :127/3 )

"விழவு ஊரில் கூத்தே போல் வீழ்ந்து அவிதல் கண்டும் "10 (பழமொழி நானூறு :343/2 )

. http://tamilconcordance.in/

கூத்து என்னும் சொல் கி. மு 2 ஆம் நூற்றாண்டிலிருந்து சங்கம் மருவிய காலம் வரை பத்து இடங்களில் மட்டுமே இடம்பெற்று இருந்தாலும் கூத்தர் , கூத்தன், கூத்தாட்டு , கூத்தியும் , கூத்தியர் போன்ற சொற்கள் ஆடல் நிகழ்த்துவோரைக் குறிக்க பயன்பட்டு உள்ளன. கோடியர் , வைரியர் , கண்ணுளர் போன்ற சங்க இலக்கிய நூல்களில் உள்ள சொற்கள் கூத்தரைக் குறிப்பிடுகின்றவை.

" தமிழர் மத்தியில் நாடகத்திற்கான பிரதியீட்டுச் சொல் கூத்து என்பதாகும். கூத்து என்பதற்கு கருத்து ஆட்டம் என்பதாகும். தமிழரின் மரபில் ஆட்டமும் ஆரம்பத்தில் நாடகமாக இருந்தது. கூத்திற்கு வரைவிலக்கணம் கூறிய இளம்பூரணர் கூத்தினைக் கதை தழுவிய ஆட்டம் என்றே குறிப்பிட்டார் "11(சி. மௌனகுரு :2010:ப- 18)

என்னும் கருத்து கூத்து குறித்த தெளிவான கருத்தினை முன் வைக்கின்றது.

17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்நாட்டில் கிராமத்து மக்கள் , படிப்பறிவற்றவர்கள் அதிகமானோர் பார்க்கும் ஒன்றாக தெருக்கூத்து விளங்கியது.அவ்வகையில் பிற்காலத்தில் கூத்து

என்பது தெருக்கூத்தாக பரிணமித்து நிலைபெற்று இன்றும் சில கிராமப் பகுதிகளில் நிகழ்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது .

**அரங்கு :**

Theatre என்னும் ஆங்கிலச் சொல்லின் நேரடிச் சொல்லாக அரங்கு என்னும் சொல் அமையினும் , சினிமா படம் காட்டப்படுகின்ற இடம் என்னும் பொருளிலேயே பெரும்பாலும் தற்பொழுது வழங்கப்படுகிறது.

அரங்கு அல்லது அரங்கம் என்பதை நாடகம் என்று பொதுவாக குறிப்பிடுவர் . ஆனால் இவ்விரண்டிற்கும் இடையே வேறுபாடுகள் உண்டு. நாடகம் என்பது நிகழ்த்துக் கலை என்றால் அந்நிகழ்த்துகலையின் அனைத்துக் கூறுகளையும் இசை , மேடை , ஒப்பனை , திரைச்சீலை , கதாபாத்திரங்கள் என அனைத்தையும் உள்ளடக்கியது.

"Theater is a physical space where drama is performed. It is a place where actors perform live in front of an audience. Theatrical performances can include plays, musicals, operas, ballets, and other forms of entertainment "12(https://keydifferences.com/difference-between-play-and-drama.html )

அரங்கு என்னும் சொல் Theatre என்னும் ஆங்கிலச் சொல் வழக்கில் அதன் வேர்ச்சொல் கிரேக்கமாகும். Theatron என்னும் கிரேக்கச் சொல்லிற்கான பொருள் பார்க்குமிடம் என்பது. நிகழிடம் , களம் , அரங்கு என்னும் சொற்களில் அரங்கம் அமையும். அரங்கு என்பது நடிகனை மையப்படுத்தினாலும் ஒப்பனை , உடை , காட்சியமைப்பு , ஒலி ஒளி அமைப்பு , நடனம் போன்றவற்றின் நெறியாளர் ஆகிய அனைவரும் உள்ளடங்கிய ஒரு அரங்கு என்னும் நிகழிடத்தில் ஆடல் , பாடல் , கூத்து , நாடகம் என நிகழ்த்திக் காட்டப் பெறும் . சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதை அரங்கினைப் பற்றி விரிவாக விளக்கியுள்ளது.

அரங்கம் என்பது நிகழிடம் , ஆற்றிடைக்குறை போன்ற பொருளில் அமையினும் சிலப்பதிகாரம் , மணிமேகலை , திருக்குறள் , திணைமாலை நூற்றைம்பது , பழமொழி நானூறு ஆகிய நூல்களும் குறிப்பிட்டு உள்ளன.

"விருந்து-பட கிடந்த அரும் தொழில் அரங்கத்து
பேர் இசை மன்னர் பெயர்புறத்து எடுத்த -"13( புகார் :3/113,114)

"வல கால் முன் மிதித்து ஏறி அரங்கத்து
வல தூண் சேர்தல் வழக்கு என பொருந்தி "14 ( புகார்: 3/131,132 )

"பாரதி ஆடிய பாரதி_அரங்கத்து "15
( புகார்:6/39 )

"நீர் திரை அரங்கத்து நிகர்த்து முன் நின்ற " 16( புகார்:6/50 )

"நூல் நெறி மரபின் அரங்கம் அளக்கும் " 17(புகார்:3/99 )

" ஆங்கு அவள்-தன்னுடன் அணி மணி அரங்கம்
வீங்கு நீர் ஞாலம் ஆள்வோன் ஏறி " 18(வஞ்சி: 28/65,66 )

" பொன் புனை அரங்கமும் புனை பூம் பந்தரும் " 19 ( வஞ்சி:27/18 )

" திரு மலர் பொய்கையும் வரி காண் அரங்கமும்
பேர் இசை மன்னர்க்கு ஏற்பவை பிறவும் " 20( வஞ்சி: 27/20,21)
"மண்ணீட்டு அரங்கமும் மலர் பூம் பந்தரும் "21 (வஞ்சி:28/44 )
"தோற்றிய அரங்கில் தொழுதனர் ஏத்த " 22(புகார்:3/106 )
"வாக்கினால் ஆடு_அரங்கில் வந்து "23( புகார்:3/179 )
"உத்தர பலகையோடு அரங்கின் பலகை " 24( புகார்:3/103)
" தமனிய மாளிகை புனை மணி அரங்கின்
வதுவை வேண்மாள் மங்கல மடந்தை" 25( வஞ்சி: 28/50,51 )
"தலைக்கோல் எய்தி தலை அரங்கு ஏறி 26 " ( புகார்:3/161)
"நாடக மடந்தையர் ஆடு அரங்கு இழந்து ஆங்கு "27 (மது:22/142 )
"நாடக மடந்தையர் ஆடு அரங்கு யாங்கணும் " 28 (வஞ்சி:26/68 )
"அரங்கு விலக்கே ஆடல் என்று அனைத்தும் " 28 (வஞ்சி:30/228 )
"அரங்கும் ஆடலும் தூக்கும் வரியும் " 29 ( புகார்:10/258 )
"அரங்கும் பள்ளியும் ஒருங்குடன் பரப்பி "30 (வஞ்சி:25/14 )
"மங்கை மாதவி அரங்கேற்று காதையும் " 31 (புகார்:0/65 )
"அரங்கின் மேல் ஆடுநர் போல் ஆகாமல் நன்று " 32 (ஏலாதி:24/3 )
"ஆடா அரங்கினுள் ஆடுவாள் ஈடு ஆய " 33 (திணை150:129/2 )
" நிரை இருந்து மாண்ட அரங்கினுள் வட்டு " 34 (பழ:86/3 )
" அரங்கு இன்றி வட்டு ஆடிய அற்றே நிரம்பிய " 35 (குறள்:41 1/1 )
" கானம் கடி அரங்கா கைம்மறிப்ப கோடலார் " 36 ( திணை150:111/1 )

போன்ற நூல்களில் அரங்கம் என்னும் சொல் இடம் பெற்று உள்ளன.

அரங்கு என்பது கூத்து , நாடகம் , ஆடல் , பாடல் போன்ற கலைகள் நடைபெறும் இடம் என்பதில் அச்சொற்களுக்கான புரிதலை நுட்பமாக அறிந்து கொள்ள முடியும்

**நாடகம் :**

"Drama is a genre of literature that is written in the form of prose or poetry and is meant to be performed on stage, radio, or television. It is a fictional or non-fictional work that often portrays characters in conflict, tension, and various other types of emotions. Drama is designed to inform, educate, and entertain the audience at the same time "37.(.https://keydifferences.com/difference-between-play-and-drama.html )

நாடகம் என்பது Drama என்னும் ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவமாக இருந்தாலும் Dramenon என்னும் கிரேக்கச் சொல்லிருந்து தோன்றியது. இதன் பொருள் நிகழ்த்தப்பட்டது என்பது.

நாடகம் என்பது போலச் செய்தலாகும். அரிஸ்டாட்டில் இதனை Mimesis என்பார். நாடக மரபில் வடமொழியில் அனுகரணம் என்று குறிக்கப்படும். இதற்கும் போலச் செய்தல் என்பதே பொருள் .

இந்நாடகம் என்னும் சொல் தமிழ் இலக்கியங்களில் சங்க காலம் தொடங்கி தற்காலம் வரை பயன்படுத்தப்பட்டு வருகின்றதே நாடகத்தின் தொன்மையை அறிவதற்கு உரியது. சங்க இலக்கியங்களான பெரும் பாணற்றுப்படை , பட்டினப்பாலை , மதுரைக்காஞ்சி போன்றவற்றோடு சிலப்பதிகாரம் , மணிமேகலை , ஏலாதி ஆகிய நூல்களிலும் பெருமளவு எடுத்தாளப் பெற்றிருப்பது சான்றாகும்..

"நாடக மகளிர் ஆடு_களத்து எடுத்த " 38(பெரும் :55)

"பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும் "- 39(பட்டினப் பாலை : 113 )

"வால சரிதை நாடகங்களில்
வேல் நெடும் கண் பிஞ்ஞையோடு ஆடிய "40 (மதுரைக் காஞ்சி : 17/29,30 )

"நாடகம் ஏத்தும் நாடக கணிகையொடு " 41 ( புகார்:0/15 )

" நாடக மடந்தையர் ஆடு அரங்கு இழந்து ஆங்கு " 42(மது:22/142 )

"நாடக மகளிர் ஈர்_ஐம்பத்து இருவரும் " 43(வஞ்சி:26/128 )

" நாடக மகளிரும் நல தகு மாக்களும் " 44 ( வஞ்சி:26/141 )

" நாடக_மகளிர்க்கு நன்கனம் வகுத்த " 45(மணி:2/30 )

" நாடக_மடந்தையர் நலம் கெழு வீதி " 46( மணி:4/51/

"நாடக காப்பிய நல்_நூல் நுனிப்போர் " 47(மணி:19/80 )

" நகுதல் அல்லது நாடக கணிகையர் " 48 (மணி:24/23 )

"நல் மனம் பிறந்த நாடக கணிகையை " 49 ( மணி:24/75 )

"நாடகம் விரும்ப நல் நலம் கவினி " 50( மணி 18/58 )

" நாடகம் கண்டு பாடல் பான்மையின் " 51(மணி:25/8 )

"நாடகம் சாராமை நாடுங்கால் நாடகம் " 52 (ஏலாதி:25/2 )

"நாடகம் சாராமை நாடுங்கால்
நாடகம் சேர்ந்தால் பகை பழி தீ சொல்லே சாக்காடே " 53(ஏலாதி:25/2,3 )

போன்றவற்றிருந்து நாடகம் என்னும் சொல் இடம் பெற்றுள்ள நூல்களை அறிய முடிவது குறிப்பிடத்தக்கது . தமிழ் நிலப் பகுதியில் நடனம் , நாடகம் ஆகிய இரண்டுமே ஒன்றாககப் பார்க்கப்படும் நிலையில் நடன மகளிர் நாடக மகளிர் என்றே குறிப்பிடப்படுவதை நாடக மடந்தையர் , நாடக மகளிர் போன்ற சொற்களிலிருந்து அறிய முடிகின்றது

அரங்கில் நிகழ்த்தப்பெறும் நாடகம் கற்பனையும் உண்மையும் கலந்த ஒன்று என்பதில் நாடகம் தனித்து நிற்கும் இலக்கிய வகையாக வடிவமாக விளங்குகின்றது.

**நாடக இலக்கியம் :**

அரங்கில் நிகழ்த்தப் பெறும் நாடகம் எழுத்துரு கொள்ளும் பொழுது நாடக இலக்கியமாக தன் விஸ்வரூபத்தை எடுத்து நிற்கிறது.

"Play is a literary composition that is written in single or multiple acts, consisting of different scenes in each act. It is a type of drama that is meant to be performed on stage. The primary difference

between play and drama is that play is a dramatic performance on the stage, whereas drama is a literary composition in the form of prose or verse that portrays dialogue showing conflict which the main character attempts to resolve " 54 https://keydifferences.com/difference-between-play-and-drama.html )

" பிளே (play ) இதற்கு விளையாடுதல் என்ற கருத்து உண்டு. சேக்ஸ்பியருடைய நாடகங்களை சேக்ஸ்பியர் 'plays ' என்று குறிப்பிடுவர். இவ்வாறே ஜோன்சன்ஸ் , இப்ஸன் , காளிதாசர் ஆகியோரின் நாடகங்களையும் அவர்களது plays என்றே குறிப்பிடுவர் . இது ஆடுவதற்கு உரியது என்ற கருத்தை உடையது. இப்போது எழுத்து வடிவிலே உள்ளது . இது நிகழ்த்திக் காட்டப்படுவதற்கு உரியது என்கின்ற கருத்திலேயே Play என்கின்ற சொல்லைப் பயன்படுத்துகின்றோம் " 55( அரங்கு ஒர் அறிமுகம் :7)

நடிப்பதற்கென்று உருவாக்கப்பட்ட ஒன்று படிப்பதற்கும் உரியதாக உருமாற்றம் அடைவதே பிளே என்றாகின்றது. படிப்பதற்கு உரியதாக உருவாக்கப்பட்ட பிளே என்பது நடிப்பதற்குரியதாக மாறும் பொழுது அது நாடகம் (Drama ) என்று அழைக்கப் பெறும். அரங்கில் கூத்தும் நாடகமும் அரங்கேற்றப்படும். கூத்தும் நாடகமும் இலக்கிய தகுதி பெற்று பிளே என அழைக்கப்படுவதற்கான வாய்ப்புகளும் உண்டு.

**முடிவுரை**

கூத்து , அரங்கம் , நாடகம் ஆகிய மூன்று சொற்களும் தமிழ் இலக்கியங்களில் பயன்பாடுகளில் உள்ள வேறுபாடுகளை அறிந்த நிலையில் , நேரடிச் சான்றுகளே நுட்பக் கூறுகளை மேலும் விளக்குவதற்கு உரியதாக அமையும். மூன்றிற்குமான அடிப்படை வேறுபாடுகளை தமிழ் நாடக உலகமும் நாடக இலக்கியமும் அறிவதன் மூலம் அதன் சிறப்புகள் மேலும் ஆய்வுலகில் தரவாகவும் தரமாகவும் ஆக்கப் பெறும்.

**துணை நூற்பட்டியல்**

1. https://keydifferences.com/difference-between-play-and-drama.html ).
2. http://tamilconcordance.in/ )
3. சி. மௌனகுரு , அரங்கியல் , பூபாலசிங்கம் புத்தக சாலை , 202 , செட்டியார் தெரு , கொழும்பு – 11. 2ம் பதிப்பு – 2010.
4. பால .சுகுமார் , உலக அரங்க வரலாறு , அனாமிகா சவுத் ஏசியன் புக்ஸ் ,48, பெய்லி முதல் குறுக்குத் தெரு , இலங்கை. முதற்பதிப்பு -1996
5. பேராசிரியர்.கா.சிவத்தம்பி & பேராசிரியர் .சி. மௌனகுரு & க . திலக நாதன் , அரங்கம் ஓர் அறிமுகம்
6. அமரர். சி. பற்குணம் நினைவு
7. மலர்க்குழு , மனிதவள , மேம்பாட்டு நிலையம் , திருகோணமலை முதல் பதிப்பு : மே ,1999.